# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319464

1. District : Madurai மாவட்டம் PS: V K Pc காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No.: 02/2026 முதஅ எண் Date: 23.03.2026 நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) P.C. Act 1988 as amended by P.C (Amendment) Act 2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 13.03.2026 at about 15:00 hrs. 18.03.2026 at about 15:00 hrs 19.03.2026 at about 10:00 hrs 11:40 hrs. 20.03.26 at about 14:55 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : 23.03.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 08:00 hrs. நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 23.03.2026 பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : 09:05 hrs. நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 42 kms, west o/o Revenue Inspector at Usampatti, Madurai – Theni Road, near Murugan temple, Usampatti (Usilampatti)

Beat Number : முதற் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்குப்புறம் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவற்பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Muthuraman குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Mookan (late) தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 03.09.1984 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Skilled B grade worker தொழில் at TNPL Manapaari, Trichy. (g) Address : முகவரி Muthiyanpatti village, Vaguvani Post, Usampatti Taluk, Madurai district.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / சந்தேகத்திற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைபின் தனித்தாள் இணைக்கவும்) TV. Subbiah, Village Administrative Office, Veppanuthu village, Usampatti Taluk, Madurai district.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets Attached
Pages 3 to 7.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/3/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் P.M. RAJESH PEASH
Rank: நிலை Inspector of Police
VKAC
Madurai
23.03.2026

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 23.03.26
09:55 hrs
APH

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 23.03.2026-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், வகுரணி அஞ்சல், முத்தையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த R.மூக்கன் அவர்களின் மகன் திரு. M.முத்துராமன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.முத்துராமன், த/பெ.R.மூக்கன், முத்தையன்பட்டி கிராமம், வகுரணி அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் கனம் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, மதுரை. நான் திருச்சி மணப்பாறையில் உள்ள தமிழ்நாடு காகித ஆலை குடியிருப்பில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் மணப்பாறை தமிழ்நாடு காகித ஆலையில் Skilled B Grade பணியாளராக பணிபுரிந்து வருகின்றேன். எனது சொந்த ஊர் மதுரை உசிலம்பட்டி தாலுகா முத்தையன்பட்டி கிராமம் ஆகும். நான் B.Sc., B.Ed., படித்துள்ளேன். எனது செல்போன் எண். 9843814373 ஆகும். எனது அப்பா திரு.மூக்கன் அவர்கள் 15.11.2025 தேதியன்று காலமாகிவிட்டார். எனது அம்மா திருமதி. கருப்பாயி அவர்கள் எனது அக்கா திருமதி. பிரமிளா அவர்களுடன் முத்தையன்பட்டியில் உள்ள எங்களது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறார். என்னுடன் பிறந்தவர்கள் 1. அக்கா பிரமிளா 2. நான் மற்றும் எனது தங்கை 3. பிரியா ஆவோம். எங்களது பூர்விக சொத்து உசிலம்பட்டி தாலுகா வேப்பனூத்து கிராம சர்வே எண்.103/1B1, 103/1C1, 103/1C4, 103/1C6, 103/6B, 103/7B, 103/8B, 103/9, 107/3A மற்றும் 103/1C5-ல் மொத்தம் சுமார் 2 ஏக்கர் 56 சென்ட் புஞ்சை நிலம் எனது தந்தை மூக்கன் அவர்கள் பெயரில் உள்ளது. எனது தந்தை பெயரில் அந்த இடங்களுக்கு பட்டா உள்ளது. அதற்கான பட்டா எண். 1327 மற்றும் 1502 ஆகும். எனது தந்தை இறந்த காரணத்தினால் எனது தந்தை பெயரில் உள்ள அந்த இடங்களுக்கான பட்டாவை வாரிசு அடிப்படையில் எங்களது பெயரில் மாற்றுவதற்காக கடந்த 13.01.2026ம் தேதியன்று வாரிசு சான்றிதழ் பெற்றோம். நான் வெளியூரில் இருப்பதால் எனது அக்கா திருமதி.பிரமிளா அவர்கள் எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக கடந்த 18.02.2026-ம் தேதியன்று ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்தார். அதன் காரணமாக எனது அக்காவின் செல்போன் எண். 6385020601க்கு கடந்த 06.03.2026ம்

தேதி மதியம் செல்போன் எண்.8015455041 என்ற எண்ணிலிருந்து எனது அக்காவை தொடர்பு கொண்ட நபர், தான் வேப்பலூர்த்து கிராம நிர்வாக அலுவலர் சுப்பையா என்றும் பட்டா பெயர் மாற்றத்திற்கான ஆவணங்களை எடுத்துக்கொண்டு, அவரை அவரது அலுவலகமான கள்ளப்பட்டியில் உள்ள வேப்பலூர்த்து கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து சந்திக்குமாறு கூறியுள்ளார். உடனே எனது அக்கா அவரிடம் எனது தம்பி முத்துராமன் உங்களிடம் இது சம்மந்தமாக பேசுவார் என கூறிவிட்டு அத்தகவலை செல்போனில் என்னிடம் தெரிவித்தார். அதன் காரணமாக அந்த சமயத்தில் நான் எனது செல்போன் எண். 9843814373-லிருந்து கிராம நிர்வாக அலுவலர் திரு.சுப்பையா அவர்களின் செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டேன். அவர் அதனை எடுக்க வில்லை. பிறகு சிறிது நேரம் கழித்து மதியம் சுமார் 02.15 மணிக்கு திரு.சுப்பையா அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு என்னை யார் என்று விசாரித்தார். அவரிடம் நான் எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்மந்தமாக எனது அக்கா பிரமிளா விண்ணப்பித்த விபரத்தை கூறினேன். அப்பொழுது அவர் என்னிடம், வருவாய் துறையினர் தற்பொழுது வேலை நிறுத்தத்தில் இருப்பதால், அது முடிந்தவுடன் எங்களது பட்டா பெயர் மாற்றத்திற்கு விரைவில் கிடைக்க, சிபாரிசு செய்து பெற்றுத் தருவதாக கூறி அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து கொண்டு அவரை நேரில் வந்து விரைவில் சந்திக்கும்படி கூறினார். நானும் சரி என்றேன். அதன்பிறகு கடந்த 13.03.2026ம் தேதியன்று காலையில் நான் VAO திரு.சுப்பையா அவர்களிடம் செல்போனில் தொடர்பு கொண்டு அவர் கூறியபடி அவரை சந்திப்பது சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடம், அவர், உசிலம்பட்டியில், மதுரை - தேனி ரோட்டில் உள்ள முருகன் கோயில் அருகிலுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி கூறினார். அதன்படி அன்று காலையில் நான் திருச்சியிலிருந்து கிளம்பி மதியம் சுமார் 03.00 மணிக்கு உசிலம்பட்டியில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.சுப்பையா அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்திகொண்டு என்னிடமிருந்த எனது அக்கா பிரமிளா பெயரில் விண்ணப்பித்த ஆன்லைன் விண்ணப்பம் எண். 2026/0103/24/007741, நாள்.18.02.2026 ன் நகல், எங்கள் இடத்திற்கான பட்டா எண்.1327 மற்றும் 1502 நகல் எனது தந்தையின் இறப்பு சான்றிதழின் நகல், எங்களின் வாரிசு சான்றிதழ், மற்றும் எனது அக்கா பிரமிளாவின் ஆதார் கார்டின் நகல் ஆகியவற்றை கொடுத்தேன். அவர்

அதனைப் பார்த்துவிட்டு, என்னிடம் எங்களது பட்டா பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்தை விரைவில் சிபாரிசு செய்து அதனை பெற்றுத்தருவதற்கு ஏற்பாடு செய்துதருகிறேன், அதற்கு ரூ.5,000/- தனது செலவிற்கு தரும்படி என்னிடம் கேட்டார். அதற்கு நான் ரூ.5,000/- அரசுக்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டேன். அவர் இல்லை அது எனக்கு தனியாக கொடுக்கவேண்டிய பணம், அப்பணம் கொடுக்காவிட்டால், நான் பட்டா பெயர் மாற்றத்திற்கு சிபாரிசு செய்யமாட்டேன், நீங்கள் அலைந்துகொண்டுதான் இருக்கவேண்டும் எனக் கூறினார். நான் சரியென கூறிவிட்டு வந்துவிட்டேன். இத்தகவலை எனது சகோதரி பிரமிளா மற்றும் எங்களது தாயாரிடம் தெரிவித்தேன். அவர்கள் இதற்கு போய் VAO லஞ்சம் கேட்கிறாரே என வருத்தப்பட்டார்கள். பின்னர் கடந்த 18.03.2026 ஆம் தேதியன்று VAO சுப்பையாவிடம் பேசி பணம் கொடுக்காமல் எங்களது பேரில் பட்டாவை மாற்றுவதற்காக அன்று மதியம் சுமார் 3 மணியளவில் நான் எனது செல்போன் எண்ணிலிருந்து VAO திரு.சுப்பையாவின் செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு அவரிடம் எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வது குறித்து கேட்டபோது, அவர் என்னிடம், நான் கேட்ட பணம் ரூ.5,000/- உடனே கொண்டுவந்து கொடுங்கள் நான் உடனே உங்களது விண்ணப்பத்தை சிபாரிசு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தருகிறேன் என கறாராக கூறினார். உடனே நான் அவரிடம் நாளை அல்லது நாளை மறுநாள் அவரை வந்து சந்திப்பதாக கூறினேன், அவரும் சரி என்றார். பின்னர் 19.03.2026 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் VAO திரு.சுப்பையா அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு என்னிடம், இன்று உசிலம்பட்டிக்கு வந்து என்னை பார்த்து நான் கேட்ட பணம் ரூ.5,000/- கொடுக்கிறீர்களா என கேட்டார். நான் அவரிடம் சரி பார்க்கிறேன் என்று கூறிவிட்டேன். பிறகு காலை சுமார் 11.40 மணியளவில் VAO சுப்பையா அவர்கள் என்னை மீண்டும் செல்போனில் தொடர்பு கொண்டு திருச்சியிலிருந்து கிளம்பி வந்துகொண்டிருக்கிறீர்களா எனக் கேட்டார். அதற்கு நான் அவரிடம் இன்று என்னால் வரஇயலாது, நாளை வருகிறேன் என கூறினேன். அப்போது அவர் என்னிடம், அவரை உசிலம்பட்டியில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கு காலையில் அவர் கேட்ட பணம் ரூ.5,000/-த்துடன் வந்து அப்பணத்தை கொடுக்கும்படி கூறினார். பிறகு 20.03.2026 ஆம் தேதி மதியம் சுமார் 01.00 மணிக்கு திரு.சுப்பையா அவர்கள் அவரது

செல்போனிலிருந்து எனது செல்போனை தொடர்பு கொண்டு, எங்கே இருக்கிறீர்கள் என என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஊருக்கு வந்துவிட்டேன் எனக் கூறினேன். அதற்கு அவர் என்னிடத்தில் நான் மதுரைக்கு வந்துவிட்டேன், நீங்கள் மதுரை, பெரியார் பேருந்து நிலையம் அருகில் வந்து என்னை தொடர்புகொள்ளுங்கள் எனக் கூறினார். பிறகு நான் மதியம் சுமார் 01.30 மணியளவில் எனது செல்போன் எண்ணிலிருந்து VAO சுப்பையா அவர்களை தொடர்பு கொண்டு அவரிடம், நான் உசிலம்பட்டியிலிருந்து கிளம்பி மதுரைக்கு வந்து கொண்டிருக்கிறேன் எனத் தெரிவித்தேன். அதற்கு அவர், நீங்கள் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு வந்துவிட்டு என்னிடம் பேசுங்கள் எனக்கூறினார். அதன்படி நான் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு வந்து மதியம் சுமார் 02.45 மணியளவில் VAO சுப்பையா அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, திரு. சுப்பையா அவர்கள் என்னை தங்கரீகல் தியேட்டருக்கு அருகில் உள்ள சபரீஸ் ஹோட்டலுக்கு வந்து அவரை சந்திக்கும்படி கூறினார். அவர் கூறியபடி சுமார் 10 நிமிடத்தில் சபரீஸ் ஹோட்டலுக்கு சென்று அங்குவைத்து VAO சுப்பையா அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், நான் கேட்ட ரூ.5,000/-த்தை கொடுங்கள், நான் உங்களுக்கான பட்டாவை பெயர் மாற்றம் செய்வதற்கு சிபாரிசு செய்து அதனை விரைந்து கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து தருகிறேன் எனக்கூறினார். நான் அவரிடம் தற்போது என்னிடம் ரூ.5,000/- இல்லை, கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டேன். உடனே அவர் என்னிடம் கோபமாக, வரும் திங்கட்கிழமை (23.03.2026) காலையில் உசிலம்பட்டியில் உள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலத்திற்கு வந்து நான் கேட்ட ரூ.5,000/-த்தை கொடுத்தால்தான் உங்களது பட்டா பெயர் மாற்றம் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுத்து, சிபாரிசு செய்து அதனை விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்வேன், இல்லாவிட்டால் உங்களது விண்ணப்பத்தை நிராகரித்துவிடுவேன் என கூறினார். நானும் சரியென கூறிவிட்டு, எங்களது வீட்டிற்கு வந்து, எனது அக்கா பிரமிளாவிடம் நடந்தவற்றை கூறி வருத்தப்பட்டேன். எங்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு விருப்பமில்லை. எனது அக்கா பிரமிளா அவர்கள் இதுசம்மந்தமாக மதுரையில் உள்ள லஞ்ச ஒழிப்புதுறையில் அவர் சார்பாக என்னை புகார் கொடுக்கச் சொன்னார். அதன் காரணமாக, எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய சிபாரிசு செய்து, அதனை விரைவில் கிடைப்பது ஏற்பாடு செய்வதற்காக என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் வேப்பனூத்து VAO திரு.சுப்பையா அவர்கள் மீது

நடவடிக்கை எடுக்க இப்புகார் மனுவை கொடுக்கிறேன். அத்துடன் நான் ஏற்கனவே VAO திரு.சுப்பையா அவர்களிடம் கொடுத்த பட்டா பெயர் மாற்றத்திற்கான ஆன்லைன் விண்ணப்ப எண். 2026/0103/24/007741, பட்டா, எனது தந்தையின் இறப்பு சான்றிதழ், எங்களது வாரிசு சான்றிதழ், எனது அக்கா பிரமிளாவின் ஆதார் கார்டு ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும் VAO திரு.சுப்பையா அவர்கள் என்னிடம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-த்தையும் கொண்டுவந்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXXX (M. Muthuraman) 23/3/26.

**Sir, Received the typed complaint this day on 23.03.2026 at 08.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 02/2026, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.05 hrs and took up investigation. Sd./-XXXXXX (P.M.Ramesh Prabhu) 23.03.2026, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. M. Muthuraman, S/o.R. Mookkan, Muthaiyanpatti, Vagurani (Post), Usilampatti Taluk, Madurai District along with Photo copies of Online Application No. 2026/0103/24/007741, Patta Nos. 1327 and 1502, Death certificate of Mookkan, Legal heir Certificate and Aadhar Card of Tmt. Pramila are enclosed herewith and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

**(P.M.Ramesh Prabhu)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**
23.03.2026.